25—4—1974	.. ..	குடியாத்தத்தில் 10—3—1974 அன்று நடந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்குத் துயர் தனிப்புத் தொகை.	1,001·00
25—4—1974	.. ..	1—7—1970 அன்று படைக்கலந்தாங்கிய முதற் பிரிவினருக்குக் கட்டில் விளக்கம் செய்து கொண்டிருந்தபோது, சுரங்கம் வெடித்ததின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் இரு கண்களையும் இரு கைகளையும் இழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவருக்கு வழங்கப்பட்ட தொகை.	2,000·00
27—4—1974	.. ..	23—4—1974 அன்று பசலுணவு உட்கொண்ட பிறகு இரு சிறுவர்கள் மாண்டனர். ஒருவனது பெயர் பெருமாள். அவனுக்கு வயது 6. அவன் பழனிசாமி கவுண்டரது மகன் ஆவான். மற்றொரு சிறுவனின் பெயர் பி. பிரகாஷ். அவனுடைய வயது 9. அவன் பழனிசாமி எகாலி என்பவர் மகன் ஆவான். இவ்விரு சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தொகை வழங்கப்பட்டது. மதுரை மாவட்டம் திண்டுக்கல் வட்டம், செட்டியார்பட்டியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 என்ற வீதத்தில் இரு குடும்பங்களுக்கும் தொகை அனுப்பப்பட்டது.	4,000·00
27—4—1974	.. ..	மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கு அருகில் அண்மையில் பெய்த (ஏப்ரல் 1974) மழையின் காரணமாக மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்ட தொகை.	30,000·00
8—5—1974	.. ..	சென்னை சிரணிபுரத்தின் 27—11—1973-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தில் தீ அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது தனது வலது கால் எலும்பு முறிந்துவிட்ட திரு. மணி அவர்களின் மனைவி திருமதி. தனலட்சுமிக்கு வழங்கிய தொகை.	250·00

A 17—15